

# கலைஞரும் நானும் 19

**“கலைஞரின் 26 வயதிலிருந்து, அதாவது 1950-ஆம் ஆண்டு முதல் ஏவி.எம்-க்கும் அவருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. எங்களுக்கும் அவருக்குமான தொடர்பு வர்த்தக உறவுகளைத் தாண்டியது" என தன் நினைவுகளைப் பகிர்ந்துகொள்கிறார் ஏவி.எம் திரைப்படத் தயாரிப்பு நிறுவனத்தைச் சேர்ந்த ஏவி.எம்.சரவணன்.**

**■ ஏவி.எம்.சரவணன்**

## “நன்றி நவில நேரில் வரவேண்டாம்!”





### பொன்விழா மேடை

1997-ஆம் ஆண்டில் எங்கள் நிறுவனத்தின் பொன்விழா ஆண்டு. அதற்கான நிகழ்ச்சிக்கு கலைஞர் வருகை தந்திருந்தார். மேடையில் 190 பேருக்குக் கேடயம் வழங்கி, கௌரவிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டோம். அனைவருக்கும் அவர் கையால் கேடயங்களை வழங்கி கௌரவித்தார். அத்தனை பேரும் அவருக்குத் தெரிந்த திரைக்கலைஞர்கள் என்பதால், அந்த விழா உணர்ச்சிப்பூர்வமாக இருந்தது. அந்த மேடையில் எங்களையும் பாராட்டி, கௌரவித்தார் என்பது மறக்க முடியாத நிகழ்வாக மாறியது.

1998-ஆம் ஆண்டில், கலைஞரின் பவள விழாவையும், திரையுலகில் 52 ஆண்டுகள் சேவையையும் கொண்டாடும் விதமாக பிரமாண்ட விழா எடுத்தோம். அந்த விழாக்குழுவின் தலைவராகத் தலைமைப் பொறுப்பேற்று நிகழ்ச்சியை நடத்தினேன்.

“திரையுலகில் அவருடைய வசனங்கள் திருப்புமுனை ஏற்படுத்திக் கொண்டிருந்த நாட்களில், பள்ளி மாணவனாக இருந்தேன். நான் ஏழாவது படிக்கும்போது, எங்கள் நிறுவனத்தில் வந்த அவரது படமான ‘பராசக்தி’ வசனங்களை, அதே பாணியில் வார்த்தைகளை மாற்றிப் பேசி, போட்டியில் முதல் பரிசு வாங்கினேன். தமிழ் மீதான பற்று ஏற்பட, அந்த வசனங்கள் காரணமாக இருந்தன என்றால் மிகையில்லை. அதன் பின்னர் நானும் திரைத்துறைக்கு வந்து, அவரிடம் நல்ல நட்புறவில் இருப்பேன் என நினைத்துப் பார்த்ததே இல்லை. ஆனால், அது நிகழ்ந்தது.

1968-ஆம் ஆண்டில், இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டின்போது, அது தொடர்பாக ஒரு விருந்து நிகழ்ச்சி எங்கள் ஸ்டுடியோ வளாகத்தில் நடைபெற்றது. முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களுடன், முத்தமிழறிஞர் கலைஞரும் வந்து கலந்துகொண்டார். இருவருக்கும் நெருக்கமாக இருந்த இரட்டை இயக்குனர்களான கிருஷ்ணன்-பஞ்சு ஆகியோர் கலைஞரிடம் அழைத்துப்போய் என்னை அறிமுகம் செய்தனர். அப்போதுதான் கலைஞரோடு முதன்முதலில் பேசினேன். அதன்பின்னர், அவரை நட்பு ரீதியாகவும், தொழில் ரீதியாகவும் பல முறை சந்தித்திருக்கிறேன், நீண்ட நேரம் உரையாடியிருக்கிறேன்.

### ‘எழுத்தே முதல்’ என்ற செய்தி

எனக்குத் தனிப்பட்ட வகையிலும், தொழில் வகையிலும் பல நேரங்களில் ‘சப்போர்ட்’டாக நின்றவர் கலைஞர். 1972-ஆம் ஆண்டில், சுற்றுலாப் பயணிகளுக்கு உதவும் வகையில், **‘ஹலோ மெட்ராஸ்’** என்கிற சிறு பத்திரிகையை நாங்கள் தொடங்கினோம். அந்தப் பத்திரிகையை வெளியிடுவதற்கு கலைஞரைத்தான் அழைத்தேன். அக்டோபர் மாதம் எம்.ஜி.ஆர் அ.தி.மு.க.வைத் தொடங்கினார். அதற்கு அடுத்த மாதத்தில் கலைஞரை அழைத்து, அந்த நிகழ்ச்சியை நடத்தினேன். அதன் மூலம், திரைத்துறைக்கு நான் ஒரு செய்தியைச் சொல்லியிருக்கிறேன்.

எங்கள் ஸ்டுடியோவில் பல நேரங்களில் தொழிலாளர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் வேலைநிறுத்தம் செய்தபோதெல்லாம், கலைஞர்தான் தலையிட்டு இருதரப்புக்கும் நன்மை ஏற்படும் வகையில் பேசி சரி செய்தார். 67-ஆம் ஆண்டில் ஏற்பட்ட தொழிலாளர் வேலை நிறுத்தத்தின்போது, ஸ்டுடியோவை மூட வேண்டிய நிலைமை. கலைஞர் இல்லாவிட்டால் பிரச்சினை முடிவுக்கு வந்திருக்காது.

### கலைஞர்களுக்காக கலைஞர்

எம்.ஜி.ஆர் முதலமைச்சராக இருந்தபோது, தொழில்நுட்பக் கலைஞர்கள் வேலைநிறுத்தம் அறிவித்தனர். பிரச்சினை சமாளிக்க முடியாத கட்டத்தை அடைந்து கொண்டிருந்தது. அப்போது, இயக்குநர் வி.சி.குகநாதன் என்னிடம், “இந்த பிரச்சினையைத் தீர்த்து வைக்கக்கூடிய ஒரே ஒருவர் கலைஞர்தான். அவர் பதவியில் இருக்கிறாரா இல்லையா என்பதைவிட, திரையுலகில் அவர் பேச்சுக்கு எப்போதும் தனி மரியாதை உண்டு. எனவே, அவரை அணுகுவோம்" எனக் கூறினார். அதன் பின்னர், அப்போது தி.மு.க.வில் செயல்பட்டுக் கொண்டிருந்த ராதாரவி மூலம் கலைஞரின் உதவியை நாடினோம்.

> **“அவர் பதவியில் இருக்கிறாரா இல்லையா என்பதைவிட, திரையுலகில் அவர் பேச்சுக்கு எப்போதும் தனி மரியாதை உண்டு. எனவே, அவரை அணுகுவோம்!"**

“ஏவி.எம். கலைக்கூடம் நான் பணியாற்றிய இடம். என் உள்ளத்தில் எப்போதும் அதற்குத் தனி இடமுண்டு. அங்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படாமல் சுமூகமாக இருக்க வேண்டும்” என அன்புக் கட்டளையிட்டு, பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தார். அந்த நிகழ்வுக்குப் பின்னர் கலைஞரை நேரில் சந்தித்து நன்றி தெரிவிக்கலாம் என நேரம் கேட்டபோது, “அதற்காக நேரில் வரவேண்டாம்” என்றார் கலைஞர். அவரது பண்பும், பரந்த உள்ளமும் என்னைக் கவர்ந்தவை.

### நட்புக்காகச் செய்தது வருத்தமானது!

எம்.ஜி.ஆர் அவர்கள் நோய்வாய்ப்பட்டு அமெரிக்காவில் சிகிச்சை பெற்று வந்த நேரத்தில், அவர் நலம் தேறி வருவதுபோன்ற சில வீடியோக்களைக் கொண்டு வந்து, அவற்றை ஒழுங்கு படுத்தி வீடியோவாகத் தயாரிக்க எங்களை அணுகினார் ஆர்.எம்.வீரப்பன். எங்களுக்கு அவர் மூத்த சகோதரரைப் போல என்பதால், அவரது வேண்டுகோளைத் தட்ட முடியவில்லை. நட்புக்காக அந்த வேலையைச் செய்தோம். அந்த வீடியோ கேசட்டை அ.தி.மு.க.வினர் தங்களின் பிரச்சாரத்துக்குப் பயன்படுத்திக் கொண்டனர்.

அந்த வீடியோவைத் தயார் செய்தது நாங்கள்தான் என்ற தகவல் கலைஞருக்குத் தெரிந்ததும், “நம்ம பசங்களை வைத்தே நம்ம கண்ண குத்துறாங்க” என வருத்தப்பட்டிருந்தார். ஆனால், எங்களை நன்கறிந்த கலைஞர், அந்த வருத்தத்தைக் காட்டிக் கொள்ளவே இல்லை. கோபத்துக்கான அடையாளமே இல்லாமல், அதே நட்புடன் எங்களுடன் பழகினார்.

### தயக்கத்தால் கற்றுக்கொண்ட பாடம்

எம்.ஜி.ஆர் ஆட்சிக் காலத்தில், எனக்கு சென்னை மாநகர ஷெரீஃப் பதவி வழங்கப்பட்டிருந்தது. அப்போது ஒரு திருமண நிகழ்வில் கலைஞர் கலந்துகொள்கிறார். நானும் அங்கு சென்றிருந்தேன். அவரிடம் பேச வேண்டும் என நினைத்தாலும், நானாக வலியச் சென்று பேசுவதை எப்படி எடுத்துக்கொள்வாரோ என்கிற தயக்கத்தில் நின்று கொண்டிருந்தேன். ஆனால், கலைஞர் என்னைப் பார்த்ததும், நான் வணக்கம் வைப்பதற்குள் “கங்கிராஜுலேஷன்ஸ்" என்றார்.

எனது தயக்கத்தைப் புரிந்து கொண்டவராக இயல்பாக உரையாடினார். ஒருவர் நம்மிடம் பேசுவதற்குத் தயங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில், நாம் முன்னால் சென்று அவர்களிடம் உரையாடுவது என்கிற முக்கியமான பாடத்தை, அப்போது கலைஞர் எனக்குக் கற்றுக் கொடுத்தார்.

### எப்போதும் எல்லாவற்றிலும் கலைஞர்

அவர் ஆட்சியிலிருந்தாலும், இல்லாவிட்டாலும் எங்கள் குடும்ப நிகழ்ச்சி, ஸ்டுடியோ நிகழ்ச்சி எதுவாக இருந்தாலும் அவர் இல்லாமல் நிகழ்ந்ததில்லை. எங்கள் அழைப்பைத் தட்டியதில்லை. எனது தம்பி பாலு திருமணம், 2006-ஆம் ஆண்டில் நடைபெற்ற ஏவி.எம். நினைவு அஞ்சல்தலை வெளியிடும் நிகழ்ச்சி, தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சபை வளாகத்தில் எங்கள் அப்பச்சி சிலை திறப்பு என எல்லாவற்றிலும் கலைஞர் இருந்தார்.

நான் உடல்நலம் சரியில்லாமல் மருத்துவமனையில் இருந்தபோது, அதையறிந்த கலைஞர் என் மகள் உஷாவைத் தொலைபேசியில் அழைத்து, ‘ஏன் எனக்குத் தகவல் சொல்லவில்லை?’ என உரிமையுடன் கேட்டு, அடுத்த சில மணி நேரத்தில் நேரடியாக மருத்துவமனைக்கே வந்து பார்த்துச் சென்றார். அதேபோல 2009 -ஆம் ஆண்டில், ஸ்டுடியோவில் பெரிய தீ விபத்து. அதையறிந்த கலைஞர், எனது மகன் குகனுக்கு போன் செய்து, வருத்தத்தினைப் பகிர்ந்து கொண்டார்.

**அப்பச்சி மீது மரியாதையும், என் மீது அன்பாகவும் இருந்தவர் கலைஞர். எப்போதும் எங்களுக்குத் துணையாகவும், தூணாகவும் நின்றவர். கலைஞர் சிறந்த அரசியல் தலைவராகவும், ஓர் உண்மையான கலைஞராகவும் இருந்தவர். அதனால்தான் என்றென்றும் எல்லோர் மனதிலும் நிலைத்து நிற்கிறார்.”**

**...பகிர்வார்கள்**

## திராவிட ஊட்டம்!


facebook

Saravanan Chandran

கடையில் வேலைபார்க்கும் தம்பி ஒருத்தன் அன்னை சத்யா நகரில் வசிக்கிறான். அவனுக்குச் சமீபத்தில்தான் குழந்தை பிறந்தது. பிறக்கையிலேயே எடை குறைந்த குழந்தை. அவனுடைய மனைவியுமே சிறுத்துப் போய்த்தான் திரிவார். விட்டால் அரை ப்ளேட் பிரியாணியைக் கூட ஐந்தாறு நாள் வைத்துத் தின்பார். “ஏம்மா நல்லா சாப்பிடறதுக்கு என்ன?” எனக் கேட்டால், “அவ்ளோதாண்ணே திங்க முடியுது” என்பார் பரிதாபமாக.

நேற்று திடீரென வந்து நின்ற அவன், “சார் ஒரு அரைமணி நேரம் வீடு வரைக்கும் ஓடிப் போய்ட்டு வந்திரவா? பால்வாடில அவசரமா வரச் சொல்றாங்க” என்றான். போய்விட்டு வந்தவனிடம் எதற்காக அழைத்தார்கள் என்று கேட்டேன். “செர்லாக் ரெண்டு பாக்கெட் குடுக்கறதுக்காக” என்றான். அவனிடம் ஆற அமர அதுபற்றிக் கேட்டேன். இதுவரைக்கும் பால்வாடியில் என்ன நடக்கிறது என்பது எனக்கு உண்மையிலேயே தெரியாது.

“மாசமா இருக்கறப்பயே அட்டை போட்டிருவாங்க. இதுவரைக்கும் ஆறாயிரம் ரூபாய் வரைக்கும் எனக்கு வந்திருக்கு. மிச்சம் பன்னெண்டாயிரம் மெது மெதுவா வந்திரும்னு சொல்லி இருக்காங்க. பையன் எடை குறைஞ்சு பிறந்ததால கூடுதல் கவனிப்பு. பேரிச்சம்பழம், ஹார்லிக்ஸ் பாட்டிலு, சத்து மாவு, அப்புறம் நெய் டப்பா, துண்டு, ஒரு ப்ளாஸ்டிக் டம்ளர், சத்து டானிக் ரெண்டு பாட்டில் போட்டு பாக்ஸ் தருவாங்க. அப்புறம் அப்பப்ப சத்துமாவு செர்லாக்குன்னு தந்துகிட்டே இருப்பாங்க” என்றான்.

எனக்கு வியப்பாக இருந்தது. “அவங்களே அப்பப்ப போனை போட்டு கொழந்தையை தூக்கிட்டு வரச் சொல்லுவாங்க. கொழந்தையை போட்டோ எடுத்து அவங்க உயரதிகாரிங்களுக்கு அனுப்பறதுக்கே பயந்துக்குவாங்க. எம்பொண்டாட்டியை ஒழுங்கா சாப்பிடமாட்டியா? பால் ஊறனும்லன்னு கடுமையா சத்தம் போடுவாங்க” என்றான்.

இறுதியாய், “ஒன்னு சொல்ல மறந்திட்டேன் சார். பெத்த அப்பனை விட குழந்தையை நல்லா பாத்துக்குவாங்க” என்றபோது உண்மையிலேயே எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அரசுத் துறை ஒன்றைக் குறித்து அதன் பயனாளியே மகிழ்வாய் சொல்லும் விந்தையை எப்படிச் சுட்டிக்காட்டாமல் தவிர்ப்பது?

mkstalin

**ந**ம் கழகத் தலைவர்-முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள **‘ஊட்டச்சத்தை உறுதிசெய்’** திட்டத்துக்கு ஓர் எழுத்தாளரிடமிருந்து கிடைத்திருக்கும் பாராட்டு!

## :ப்ளாஷ்பேக்




இக்பால்

### பாட்டுக்குப் பாராட்டு..!

**தி**.மு.கழக ஆட்சி இரண்டாவது முறையாகக் கலைக்கப்பட்டு ஓராண்டு கடந்திருந்தது. 1992-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞரை கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்து, எனது ‘மக்கள் தீர்ப்பு’ என்ற கழக சாதனை விளக்கப் பாடல் தொகுப்பை வெளியிட வேண்டிக்கொண்டேன். நான் பாடிய 8 பாடல்களையும் கேட்டுவிட்டு, அதிலிருந்த சில பிழைகளையும் சுட்டிக்காட்டித் திருத்தம் மேற்கொள்ளச் சொல்லி அந்தத் தொகுப்பை வெளியிட்டார் கலைஞர். அதற்காக என்னைப் பாராட்டவும் செய்தார். என் குரலுக்குக் கிடைத்த மிகப் பெரும் அங்கீகாரமாக தலைவரின் பாராட்டையே கருதுகிறேன்.

**-எஸ்.ஏ.இக்பால், மாவட்ட அமைப்பாளர், கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை, கோவை வடக்கு மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### பகுத்தறிவு இளைஞர் கழகம்!

**1947-ஆம் ஆண்டு, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் திராவிடச் சிந்தனை கொண்ட மாணவர்கள் இணைந்து தொடங்கிய ‘பகுத்தறிவு இளைஞர் கழகம்’ தீவிரமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தது. பல்கலைக்கழக விடுதியில் பறந்து கொண்டிருந்த, திராவிட இயக்கக் கொடியைச் சிலர் இறக்க முயற்சிக்க, அப்போது கொடி காக்கும் முயற்சியில் திராவிடர் கழக மாணவர்கள் ஈடுபட, கைகலப்பு உருவானது. காவல்துறைத் தாக்குதலில் கே.ஏ.மதியழகன் உட்பட பலரின் கைகால்கள் நொறுக்கப்பட்டன. திராவிட இயக்க மாணவர்கள் மீது வழக்குகள், கல்லூரி வருவதற்குத் தடை, நிபந்தனைகள் என ஓர் ஆண்டுகாலம் அலைக்கழிக்கப்பட்டனர். இறுதியில், நீதிமன்றம் திராவிடர் இயக்க மாணவர்களை நிரபராதிகள் என விடுவித்தது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 124




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131